# பொது (மறுவாழ்வு)த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 38

# செஞ்சி கே.எஸ். மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# <u>பொருளடக்கம்</u>


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | அயலகத் தமிழர்கள் நலன் | 3 |
| 3. | உக்ரைன் நாட்டிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்தல் | 12 |
| 4. | முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் | 14 |
| 5. | முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன் | 32 |
| 6. | நீண்டநாள் தீர்வுகளுக்கான ஆலோசனை குழு | 32 |
| 7. | இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்புதல் | 33 |
| 8. | சிறப்பு முகாம் | 35 |
| 9. | பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்களின் வருகை | 35 |
| 10. | தாயகம் திரும்பியோர் | 38 |
| 11. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் | 44 |
| 12. | முடிவுரை | 59 |

## பொது(மறுவாழ்வு)த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

## அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை

### 1. முன்னுரை

அயலகத் தமிழர் நலனுக்காகவும், தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வு மற்றும் இலங்கைத் தமிழரின் நலனைப் பேணி பாதுகாத்திடவும் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை இயங்கி வருகிறது. அதன் கீழ் பர்மா, வியட்நாம் மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினருக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 1969–ஆம் ஆண்டு மறுவாழ்வு ஆணையரகம் உருவாக ஆணை வெளியிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், 1983–ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வந்தனர். இதனைத்

தொடர்ந்து, இத்துறையானது இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழர்கள் தங்களது உயர்கல்விக்காகவும், வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடிக்கொள்வதற்காகவும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களுக்கான பாதுகாப்புப் பணிகளை நீட்டித்து வழங்க ஏதுவாக இத்துறையானது விரிவுபடுத்தப்பட்டு, 2010–ஆம் ஆண்டு "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, அரசின் தொலைநோக்கு திட்டத்தின்படி, வெளிநாடுகளில் பாதிக்கப்படும் அயலகத் தமிழர்களை கண்டறிந்து, அவர்களுக்கு போதுமான உதவிகளை செய்திடவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு போதுமான

அடிப்படை உதவிகள் மற்றும் வாழ்வாதாரத்தினை பேணிக் காத்திடவும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், 2021–ஆம் ஆண்டு இவ்வாணையரகம் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

## 2. அயலகத் தமிழர்கள் நலன்

அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் தங்களது உயர்கல்விக்காகவும், வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடிக் கொள்வதற்காகவும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கான பாதுகாப்பிற்கு போதுமான உதவிகளை செய்வதில் இத்துறை பெரும் பங்கு வகிக்கின்றது. வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடமிருந்தோ அல்லது அவர்களது குடும்பங்களிலிருந்தோ அவசர தேவை என தொலைபேசி அழைப்பு வரும் நேரங்களில் வெளிநாடுகளில் துன்புறும்/வேலை செய்யும்

இடங்களில் வரவேண்டிய தீர்வுகளைப் பெற்று வழங்கிடவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் சொந்த ஊர்களுக்கு கொண்டு வர இந்த துறை உதவி செய்து வருகிறது.

மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் "மாவட்ட நல அலுவலர் (அயலகத் தமிழர்கள்)" ஆக நியமிக்கப்பட்டுள்ளதுடன், தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (அயலகத் தமிழர்கள்)" ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அயலகத் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.1. அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம் அமைப்பதற்காக "வெளிநாடுவாழ் தமிழர் நலச் சட்டம்" 2011, மார்ச்–1–ஆம் நாள் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் 2022–இல் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அச்சட்டத் திருத்தத்தின்படி, அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கும் பணிகள் நடவடிக்கையில் உள்ளன. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப் பேரவை விதி எண் 110–ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இவ்வாரியம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

அ) அயலகத் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்துதல்; வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்குதல்

ஆ) குறைந்த வருவாய் கொண்ட அயலகத் தமிழர் குடும்பங்களுக்கான கல்வி/ திருமண உதவித்தொகை வழங்குதல்

இ) சென்னை மட்டுமின்றி, தமிழகத்தில் மேலும், இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் தொடங்கிட நடவடிக்கை எடுத்தல்

ஈ) அயலகத் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க கட்டணமில்லா தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகள் ஏற்படுத்துதல்

உ) அயலகத் தமிழர்களுக்கான சட்ட உதவி மையம் அமைத்தல்

## 2.2. அயலகத் தமிழர்களுக்கான இதர நலத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அயலகத் தமிழர்களுக்காக கீழ்க்கண்ட உதவிகளுக்கான பணிகளும் நடைபெற்று வருகிறது:–

அ) தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்கு சிறு தொழில் தொடங்குவதற்கு கடன் வசதி வழங்குதல்.

ஆ) அயலகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய வழிவகை செய்தல்.

இ) "தாய் மண்" திட்டத்தின் கீழ், புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களது சொந்த ஊரில் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்தல்.

## 2.3. கலாச்சாரம் மற்றும் அறிவுசார் நிகழ்வுகளை ஊக்குவிப்பதில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரித்தல்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, உலகத் தமிழ்ச் சங்கங்களுடன் ஒருங்கிணைந்து கீழ்க்கண்ட சில நிகழ்வுகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது:–

**அ) அயலகத் தமிழர் தினம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் நாள் அன்று அயலகத் தமிழர் தினமாக கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பங்களிப்புடன் அவர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், மேலும் ஊக்குவிக்கும் விதமாகவும் அமையும். மேலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலை,

இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

2021–2022–ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக ஜனவரி 12–ஆம் நாள் "தமிழால் இணைவோம்" என்ற தலைப்பில் இணையவழி மூலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் உள்ள மாண்புமிகு மாகாண ஆளுநர், பப்புவா நியூ கினியா; முன்னாள் துணை அதிபர், மொரிஷியஸ்; தலைவர், லாபூவான் துறைமுகம் மற்றும் முன்னாள் துணை அமைச்சர், மலேசியா; ஆணையர், மேரிலேண்ட் போக்குவரத்து ஆணையம், அமெரிக்கா; மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை; ஆகியோர் மற்றும் தமிழகத்தைச் சார்ந்த முக்கிய தலைவர்களின் பங்களிப்புடன், பல்வேறு

தலைப்புகளில் அவர்களின் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளும் நடைபெற்றன. இதற்காக, தமிழ்நாடு அரசால் ரூ.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ) வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் மற்றும் கலாச்சாரத்தினைப் பயிற்றுவிப்பதற்கான ஊக்கத்தொகை மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

இ) வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் / அமைப்புகளை அங்கீகாரம் செய்தல் மற்றும் கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கான நிகழ்ச்சி மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல்.

## 2.4. சுழல் நிதி

சுழல் நிதியாக ரூ.1 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, அதிலிருந்து கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்தொகையானது ஒவ்வொரு ஆண்டும் மீளப்பெறப்பட்டு வருகிறது:–

அ) வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்டெடுத்து தாயகம் அழைத்து வருதல்.

ஆ) வெளிநாடுகளில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கான மருத்துவ செலவினங்களை மேற்கொள்ளுதல்.

இ) வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் தொடர்புடைய நாட்டின் இந்திய தூதரகத்தின் ஒத்துழைப்புடன் சொந்த ஊர்களுக்கு கொண்டுவருதல்.

ஈ) 2021–2022–ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 149 பூத உடல்கள் இந்தியா கொண்டு வரப்பட்டு, மாநில அரசின் இலவச

அமரர் ஊர்தி சேவையின் எண் (155377) மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் இன்னலுற்ற தமிழர்களைத் தாயகம் அழைத்து வரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**3. உக்ரைன் நாட்டிலிருந்து மாணவர்களை மீட்டெடுத்தல்**

தமிழ்நாட்டிலிருந்து மருத்துவக் கல்வி மற்றும் இதர உயர்கல்வி கற்பதற்காக உக்ரைன் நாட்டிற்கு சென்று, ரஷ்ய மற்றும் உக்ரைன் நாட்டிற்கிடையிலான போர் காரணமாக, அங்கு 2000-த்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிக்கித் தவித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்பேரில், மாநில கட்டுப்பாட்டு அறை உடனடியாக உருவாக்கப்பட்டு, உக்ரைன் நாட்டில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்கும் பணியினை வெளியுறவுத் துறையுடன்

ஒருங்கிணைந்து செயல்படுத்தும் விதமாக, மறுவாழ்வுத்துறை ஆணையர் அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று, புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்கப்பட்டன. மேலும், கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மற்றும் இணையம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தங்களது குறைகளை பதிவு செய்யவும், இத்தகவல்களின் அடிப்படையில் மாநில அரசு இணைந்து மாணவர்களை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், மாணவர்களை உக்ரைனின் நான்கு அண்டை நாடுகளிலிருந்து ஒருங்கிணைத்து அழைத்து வருவதற்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நான்கு இந்திய ஆட்சிப் பணி

அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. உக்ரைன் உள்ளேயும் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களை புது டெல்லியிலிருந்து சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான அனைத்துப் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மொத்தம் 1,890 மாணவர்கள் அவர்களது சொந்த ஊர்களுக்கு பாதுகாப்பாக திரும்பியுள்ளனர். இவர்களில், 1,524 மாணவர்கள் அரசு செலவில் அழைத்து வரப்பட்டுள்ளனர். இதற்காக ரூ.3.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.3.26 கோடி அரசால் செலவிடப்பட்டுள்ளது.

## 4. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.03.2022–ஆம் நாளிட்ட புள்ளி விவரங்களின்படி, 19,316 குடும்பங்களைச் சேர்ந்த 58,492 நபர்கள் மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 108 முகாம்களில்

(திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு, ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்களுடன் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, இருப்பிடம், குடிநீர், மின்சாரம், பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசின் கொள்கைகளான முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, "இலங்கை அகதிகள் முகாம்" என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

## 4.1. பணக்கொடை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவித்தபடி கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்ட வீதத்தில் பணக்கொடை வழங்கப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ.21.29 கோடி செலவாகும்.

| வ. எண். | பிரிவு | பழைய தொகை (ரூ) | 01.09.2021 முதல் புதிதாக உயர்த்தப்பட்ட தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவர் | 1,000/– | 1,500/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது, அதற்கு மேல்) | 750/– | 1,000/– |
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 400/– | 500/– |

## 4.2. துணிமணிகள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் ஒவ்வொரு வருடமும் இலவசத் துணிமணிகளும், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை விலையில்லாப் போர்வைகளும் வழங்கும் திட்டத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் துணிமணிகள் வாங்கி வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் துணிமணிகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டதுபோல் துணிமணிகளுக்கான விலையினை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு துணிமணிகள் 2021–2022–ஆம் நிதி ஆண்டில் ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

4.3. பாத்திரங்கள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள ரூ.250/– மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும், இரண்டு வருடத்திற்கு ஒருமுறை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள மிக குறைந்த விலையில், பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு பாத்திரங்களுக்கான கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நடப்பு நிதியாண்டில் 8 வகையான எவர்சில்வர் பாத்திரங்கள் ரூ.1,285/– மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனத்திடமிருந்து வாங்கி முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, ரூ.2.42 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.4. அரிசி மானியம்

முகாம்களில் வசிக்கும் ஒவ்வொரு இலங்கைத் தமிழர் குடும்பங்களில் பெரியவர்களுக்கும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஒவ்வொரு மாதமும், ஒருவருக்கு முறையே 12 கிலோ மற்றும் 6 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இதில், ஒவ்வொரு குடும்பத்திற்கும், முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும், கூடுதல் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–ன்கீழ் 27.08.2021 அன்று முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான மொத்த அரிசியும் இலவசமாக வழங்கப்படும் எனவும், இதற்கான கூடுதல் செலவினம் ரூ.19 இலட்சத்தினை மாநில அரசே ஏற்கும் என அறிவித்து அதன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, எண்ணெய், சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இலங்கைத்

தமிழர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.5. விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. மேலும், ஏற்கனவே உள்ள திட்டத்தின் கீழும் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு, இலவச அடுப்பு, உதிரிப் பாகங்கள் மற்றும் மானியம் வழங்கப்படுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, குடும்பத்திற்கு ஆண்டொன்றிற்கு 5 எரிவாயு உருளைகளுக்கு ரூ.400/– மானியத் தொகை வீதம் வழங்க நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், எரிவாயு இணைப்பு வழங்கிட ரூ.5.26 கோடி இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், எரிவாயு உருளை மானியத் தொகைக்காக ரூ.1.30 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

**4.6. வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழான அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 7,469 புதிய வீடுகள் கட்டம் வாரியாக (in phases) கட்டப்படும் என அறிவித்ததன்படி, வீடுகள் கட்டுவதற்காக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக, அதாவது நான்கு வீடுகள் கொண்ட 868 தொகுப்புகள் (868x4= 3472) கட்டிட ரூ.173.60 கோடியும், 38 தனிவீடுகள் கட்டிட ரூ.2.14 கோடியும் ஆக மொத்தம் ரூ.175.74 கோடி நிதி

ஒதுக்கீடு செய்து ஆணைப் பெறப்பட்டு, கட்டிடம் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் தொடர்புடைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடைபெற்று வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அடியனூத்து, தோட்டனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று முகாம்களை ஒருங்கிணைத்து தோட்டனூத்து கிராமத்தில் புதிதாக 321 வீடுகள் கட்ட ரூ.17.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடு கட்டும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

முகாம்களில் குடிநீர், கழிவறை, மின்சாரம் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதிகள் கூடுதலாக செய்து கொடுக்க ஏதுவாக ரூ.30 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இதனைச் செயல்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 4.7. இலங்கைத் தமிழர் ஆண்டு (வாழ்வாதார) மேம்பாட்டு நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன்கீழ், 27.08.2021 அன்று அறிவித்தபடி, 29 மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் முகாம்களில் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண். | பணி விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | குடிநீர் மேம்பாட்டு பணிகள் | 74,51,250 |
| 2 | சுகாதார வசதிகள் | 1,95,94,800 |
| 3 | மின்சார வசதிகள் | 1,92,63,950 |
| 4 | சாலைகள் பழுதுபார்த்தல் | 36,90,000 |
| | **மொத்தம்** | **5,00,00,000** |

## 4.8. கல்வி உதவித் தொகை

4.8.1. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 11,012 மாணவர்கள் உள்ளனர். இவர்களுக்கு, இலவசக் கல்வித் திட்டம் 12–ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள் மற்றும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

4.8.2. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் உயர்கல்விக்காக இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப் பிரிவுக்கான கலந்தாய்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

4.8.3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவித்தவாறு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்ட வீதத்தில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உயர்த்தப்பட்ட விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு, ரூ.1.53 கோடி நிதி இலங்கைத் தமிழர் நிவாரண நிதியில் இருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது 1,261 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்:–

| வ. எண். | படிப்பு | கல்வித் தொகை (ரூ.) | உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021–2022 முதல்) (ரூ.) |
|---|---|---|---|
| 1. | பட்டயப் படிப்பு | 2500/– | 10,000/– |
| 2. | இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு | 3,000/– | 12,000/– |
| 3. | இளநிலை தொழிற்கல்வி பட்டப்படிப்பு | 5,000/– | 20,000/– |

4.8.4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்று அறிவித்தவாறு பொறியியல் படிப்புகளில் சேரும், மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கான மொத்த கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், அதுமட்டுமின்றி, வேளாண்மை / வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மதிப்பெண் அடிப்படையிலான, முதல் 5 மாணவர்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், இவை தவிர, மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக முதுகலை பட்டப்படிப்பில் சேரும் அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

4.8.5. மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைகளால் நடத்தப்படும் ஒவ்வொரு விடுதியிலும் தேவையின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்காக ஐந்து இடங்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ளன.

## 4.9. சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

### 4.9.1. மகளிர் சுய உதவிக் குழுக்கள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த "சமூக முதலீட்டு நிதியாக" தலா ரூ.50,000/- வீதம் முதற்கட்டமாக இலங்கை தமிழர் முகாம்களில் செயல்படும் 321 சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

சட்டமன்றப் பேரவை விதி எண் 110—இன் கீழான அறிவிப்பின்படி, ரூ.75,000/— வீதம் ஒவ்வொரு சுய உதவி குழுவிற்கும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 300 மகளிர் சுய உதவிக் குழுக்களில், 260 குழுக்கள் உருவாக்கப்பட்டு இக்குழுக்களுக்கு மட்டும் ரூ.1.25 இலட்சம் வீதம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.3.25 கோடி மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**4.9.2. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் துயர்துடைப்பு**

சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1000/— பல்வேறு இனங்களுக்காக, அதாவது ஆதரவற்ற விதவைப்

பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு வழங்கப்படுகிறது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு இறுதிசடங்குகள் செய்திட ரூ.5,000/- வழங்கப்படுகிறது. மேலும், விபத்தின் காரணமாக இறப்பு ஏதும் ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கும் முதலமைச்சரின் இலங்கை தமிழர்களின் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. பெரும் அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கு ரூ.15,000/- உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

4.9.3. மேலும், தமிழக மக்களுக்கு வழங்கப்படும், பிற அனைத்து நலத் திட்டங்களும் 20.11.2009

முதல் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டு வருகிறது.

## 4.10 திறன் மேம்பாட்டுப் பயிற்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் 27.08.2021 அன்றைய அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி 5,000 முகாம்வாழ் இளைஞர்களுக்கு அளிக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, ஆணை வெளியிடப்பட்டு முகாம்வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் மாவட்டந்தோறும் முகாம்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 3,289 நபர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## 4.11. நிதியை மீளப்பெறுதல்

2020–2021–ஆம் நிதியாண்டிற்கு இத்துறையின் மொத்த செலவினத் தொகை ரூ.124.61 கோடி மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டது. இதில், ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.67.07 கோடியில் ரூ.41.31 கோடி ஒன்றிய அரசிடமிருந்து மாநில அரசிற்கு மீளப்பெறப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் டிசம்பர் 2021 வரை மூன்று காலாண்டுகளுக்கு ரூ.91.8 கோடி மாநில அரசால் செலவிடப்பட்டு ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகை ரூ.49.48 கோடி கோரப்பட்டது, இதில், இரண்டு காலாண்டுகளுக்கான தொகை ரூ.27.75 கோடி மற்றும் மூன்றாம் காலாண்டின் பகுதித் தொகை ரூ.5.18 கோடி ஒன்றிய அரசிடமிருந்து மீளப்பெறப்பட்டுள்ளது.

## 5. முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.03.2022 அன்றைய நிலவரப்படி, 13,420 குடும்பங்களைச் சேர்ந்த 33,639 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்துகொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு ரூ.4000/- கோவிட் நிவாரண நிதியும் வழங்கப்பட்டது.

## 6. நீண்ட நாள் தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்றைய அறிவிப்பின்படி, முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாண ஏதுவாக ஆலோசனைக் குழு அமைக்க ஆணை

வெளியிடப்பட்டுள்ளது. இக்குழு, குடியுரிமை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவினை தயார் செய்து வருகிறது. இக்குழுவின் முதல் ஆலோசனைக் குழுக்கூட்டம் 29.12.2021 அன்று நடைபெற்றது.

## 7. இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்புதல்

தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் "வெளிச்செல் அனுமதி" வழங்கப்படுகிறது. 01.04.2002 முதல் 31.03.2022 வரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (UNHCR) உதவியுடன் 18,014 நபர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

## 7.1. மிகைத்தங்கல் காலத்திற்கான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தல்

இலங்கைத் தமிழர்களுக்கான விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையானது ஒன்றிய அரசால் கணிசமாக உயர்த்தித் திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலை இருந்தது. சுயவிருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவிக்கும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையின் மீது, விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம்வாரியாகத் தள்ளுபடி செய்ய மாநில அரசுக்கு ஒன்றிய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, 31.03.2022 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின் கீழ் 835 குடும்பங்களைச் சார்ந்த 1,597 இலங்கைத் தமிழர்கள் பயனடைந்துள்ளனர்.

## 8. சிறப்பு முகாம்

தற்சமயம் தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இந்த முகாமில், குற்றப் பின்னணி உள்ள/ விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது. 31.03.2022 நிலவரப்படி, இந்த சிறப்பு முகாமில் 108 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946–இன் பிரிவு 3(2)(e)–இன் கீழ் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாம்களில் அவர்களின் நடமாட்டம் முகாமிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அவர்களுக்கு சமைத்த உணவு ஒரு நாளைக்கு ரூ.175/– வீதத்தில் வழங்கப்படுகிறது.

## 9. பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்களின் வருகை

9.1. இலங்கையில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப்பொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த

22.03.2022 முதல் கடல் வழியாக இலங்கைத் தமிழர்கள் தமிழகம் வரத்தொடங்கினர். அவ்வாறு வரும் இலங்கைத் தமிழர்கள் மனித நேயத்தின் அடிப்படையில் காவல் துறையின் விசாரணைக்கு பின்னர், மண்டபம் முகாமில் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 29.04.2022 வரை 24 குடும்பங்களைச் சார்ந்த 75 நபர்கள் (அதாவது 25 ஆண்கள், 23 பெண்கள், 13 ஆண் குழந்தைகள் மற்றும் 14 பெண் குழந்தைகள்) மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.175/– வீதத்தில் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அவர்களுக்குத் தேவையான துணிமணிகள், பாய், போர்வைகள் உள்ளிட்ட 22 வகையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

**9.2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கைக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான அறிவிப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவிடும் பொருட்டு ரூ.80 கோடி மதிப்புள்ள 40,000 டன் அரிசி, ரூ.28 கோடி மதிப்புள்ள 137 வகையான மருந்துப் பொருட்கள் மற்றும் ரூ.15 கோடி மதிப்புள்ள 500 டன் பால் பவுடர் அனுப்பப்பட உள்ளதாக அறிவித்துள்ளார். இவற்றினை இலங்கைக்கு உடனடியாக வழங்க ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கும் சிறப்பு தீர்மானம் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 10. தாயகம் திரும்பியோர்

தமிழ்நாடு அரசால், ஆரம்பத்தில் இலங்கை, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாக இத்துறை உருவாக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும் சுமார் 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும் மற்றும் 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்பி வந்துள்ளனர். இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை வழங்கியுள்ளது.

### 10.1. வீடுகள்

2018–2019–ஆம் ஆண்டில் தாயகம் திரும்பியோர்களுக்கு "சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்" திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் 1,000 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதில், 869 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 131 வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2019–2020–ஆம் ஆண்டில் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின்கீழ் பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் தாயகம் திரும்பியோருக்கு 500 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 413 வீடுகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் 35 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 142 வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும்,

மீதமுள்ள வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 10.2. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி (ரெப்கோ வங்கி)

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசால் நிறுவப்பட்டு, மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய 5 தென் மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது.

இந்த வங்கி, முதன் முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 53/1961–ன்கீழ் 09.09.1969 அன்று பதிவு செய்யப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் 19.11.1969 முதல் துவங்கப்பட்டது. தற்போது, இந்த வங்கி பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 2002–ன்கீழ் பதிவு பெற்று

செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளாவிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் 108 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

31.03.2022 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

| வ. எண் | முதலீட்டாளர்கள் | மூலதனத் தொகை (இலட்சங்களில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | ஒன்றிய அரசு | 7,632.00 | 50.03 |
| 2. | தமிழ்நாடு அரசு | 713.00 | 4.67 |
| 3. | ஆந்திரா அரசு | 104.77 | 0.69 |
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரள அரசு | 61.16 | 0.40 |
| 6 | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தனி உறுப்பினர்கள் | 6,650.67 | 43.61 |
| | **மொத்தம்** | **15,253.95** | **100.00** |

ஆரம்ப காலக் கட்டத்தில், தாயகம் திரும்பியோர் தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காக குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பிற்கான பல திட்டங்களை இந்த வங்கியின் துணைக்கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது.

தற்பொழுது, இவ்வங்கி தாயகம் திரும்பியோர்க்குக் கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, குறைந்த வட்டியில் கடன் திட்டங்கள், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், இழப்பீட்டுத் தொகை (இறுதி சடங்கிற்காக), 10 மாணவர்களுக்கான உயர்கல்வி செலவு ஏற்பு, தாயகம் திரும்பிய குழந்தைகள் பயிலும் பள்ளிகளுக்குத் தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்குதல், பழுதடைந்த வீடுகளின் சீரமைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பு இருக்கை அளித்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை,

சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் இந்தத் திட்டங்களின் மூலம் பயன்பெற்றுள்ளனர். தாயகம் திரும்பியோருக்கு இந்தக் கூட்டுறவு வங்கியின் மூலம் செய்யப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ.எண். | வருடம் | உதவித் தொகை ரூ.(இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | 2016-17 | 470.00 |
| 2. | 2017-18 | 484.00 |
| 3. | 2018-19 | 618.00 |
| 4. | 2019-20 | 720.00 |
| 5. | 2020-21 | 475.00 |
| 6. | 2021-22 | 905.00 |

## 10.3. ரெப்கோ வீட்டுக்கடன் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து வீடுகள் கட்டுதல்

ரெப்கோ வங்கியின் துணை நிறுவனமான ரெப்கோ வீட்டுக்கடன் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து 70 வீடுகள் கட்டுவதற்காக திட்ட நிதியாக ரூ.3 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம்,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள காரக்கொல்லியில், தேயிலைத் தோட்டத்தில் (TANTEA) வேலை செய்து ஓய்வு பெற்ற தாயகம் திரும்பியோர்களுக்காக கட்டித்தரப்பட்டுள்ளது. இவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் வீடுகள் இன்றி இருப்பதால், இவர்களுக்காக இத்திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கப்பட்டது.

**11. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

தமிழ்நாட்டிலிருந்து வருடந்தோறும் பல்வேறு நாடுகளுக்கு வேலையின் காரணமாக தமிழர்கள் புலம்பெயர்கின்றனர். வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களைப் பணியமர்த்தும் பணியில் தற்போது இந்தியாவில் 1668 ஆட்சேர்ப்பு நிறுவனங்களும், தமிழ்நாட்டில் 133 ஆட்சேர்ப்பு நிறுவனங்களும் செயல்பட்டுவருகின்றன.

அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சுரண்டல்களிலிருந்து வேலைக்கு செல்பவர்களை பாதுகாக்கவும் மற்றும் குறைந்த

செலவில் வெளிநாட்டு வேலை நாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்துவதற்காகவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது, **இந்நிறுவனம் பொதுத்துறையின்** கீழ் இயங்கிவருகிறது.

இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983–ன்கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது.

**11.1 மூலதனம்**

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்.

## 11.2 இயக்குநர் குழு

1. இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு 30.11.1978 அன்று உருவாக்கப்பட்டது.

2. இந்நிறுவனத்திற்கான குறிப்புரைகள் சங்க அமைப்பு பதிவு எண்.7600 (1978)–ஆம் ஆண்டு, பிரிவு 76–ஆம் விதிகளின்படி இந்நிறுவன இயக்குநர் குழுவிற்கு பொது அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

3. இந்நிறுவனத்தின் வணிகத்தை இயக்குநர் குழு நிர்வகிக்கும். இந்நிறுவனத்தால் ஈட்டப்படும் வருமானம் மற்றும் செலவினங்களை பொதுக்குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்து இறுதி செய்யப்படும்.

4. இந்நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளுக்கான மாற்றங்களை செய்வதற்கு பிரிவு 76–ஆம் விதிகளின்படி இயக்குநர் குழுவிடம் ஒப்புதல் பெற வேண்டும்.

## 11.3 நோக்கம்

தமிழ்நாட்டிலிருந்து திறனுடைய மனிதவளத்தை பல்வேறு நாடுகளுக்கு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 11.4 (அ) பதிவு

i. வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக (https://www.omcmanpower.com) என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

ii. இதில் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் 4 வருடங்களுக்குச் செல்லத்தக்கவை ஆகும். 4–ஆம் வருட இறுதியில் விரும்பிய பதிவுதாரர்கள் தங்கள் பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

iii. 31.03.2022 அன்று அமைந்தவாறு **5,585** நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்துள்ளனர்.

**11.4** (ஆ) இந்நிறுவனத்தில் பதிவு செய்பவர்களிடமிருந்து கீழ்கண்டவாறு கட்டணம் வசூலிக்கப்படுகிறது:

| வகை | பதிவு கட்டணம் மற்றும் GST@ 18% |
|---|---|
| பத்தாம் வகுப்பு முதல் இளநிலை பட்டப்படிப்பு வரை (கலை/ அறிவியல்/ கணிதம்) | ரூ. 750/– |
| முதுநிலை பட்டப்படிப்பு/ தொழில்முறை/ செவிலியர்கள்/ மருத்துவம் சார்ந்த டெக்னிசியன் படிப்பு | ரூ. 1200/– |
| மருத்துவர்கள் (BDS/ MDS/ MBBS and Above) | ரூ. 2000/– |
| பதிவு புதுப்பித்தல் கட்டணம் | ரூ. 120/– |

11.5 இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:

அ. வெளிநாட்டு வேலை நாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாம்கள் நடத்துதல்.

ஆ. வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலை நாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்து கொள்ளச் செய்தல்.

இ. வெளிநாட்டு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவிபுரிதல்.

ஈ. தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.

## 11.6 வெளிநாட்டு பணியமர்த்தலின் நடைமுறைகள்

### அ. பணிக்காலியிடங்கள் தேவைகளை பெறுதல்

வெளிநாட்டிலிருந்து வேலைக்கு ஆள்பெறும் வெளிநாட்டு வேலையளிப்பவரின் தேவைகளை மேற்கொள்ள இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வப்போது பணிக்கு தேவைப்படும் வேலையாட்கள் வேண்டி வெளிநாட்டு வேலையளிப்பவர் தன் தேவைக் கடிதத்தை முழு விவரங்களுடன் ஆட்சேர்ப்பு நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பர்.

புலம்பெயர்தல் தேவைப்படும் நாடுகளுக்கு இந்தியப்பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் www.emigrate.gov.in என்ற வலைதளத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். இவ்வலைதளத்தின் மூலம் கோரிக்கை கடிதம் மற்றும் அங்கீகாரம் பெற்ற

நபர் (Power of Attorney) உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

**ஆ. நாடு சார்ந்த ஆணை (Countries Specific Orders) வழங்கல்**

E–migrate வலைதளம் (www.emigrate.gov.in) மூலம், செவிலியர்களின் தேவை பதிவேற்றம் செய்யப்பட்டபின் அதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின், குடிபெயர்வோர் பாதுகாப்புத் தலைவரால், மதிப்பாய்வு செய்யப்பட்டு, நாடு சார்ந்த ஆணை வெளியிடப்படும்.

**இ. ஆன்லைன் பதிவுக்கான இணையதளம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேவைப்படும் விண்ணப்பதாரர்கள் இந்நிறுவனத்தின் வலைதளமான www.omcmanpower.com என்ற வலைதளத்தில் தங்களின் விவரங்களை கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

## ஈ. தகுதியான பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்

E–migrate வலைதளம் மூலம் பணிக்காலியிடக் கோரிக்கை சரிபார்க்கப்பட்டதும், வெளிநாட்டு வேலை வழங்குநரால் அளிக்கப்பட்ட வேலை விவரத்தின்படி தகுதியான விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்கள் இந்நிறுவனத் தேர்வு குழுவால் சரிபார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் தரவு வங்கி மற்றும் செய்தி வெளியீடு ஆகியவற்றின் வாயிலாக தகுதிவாய்ந்த நபர்கள் வெளிநாட்டு வேலைக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## உ. நேர்காணல்

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். நேர்காணலுக்கு தேதி மற்றும் இடம் ஆகியவை வெளிநாட்டு வேலையளிப்போரிடம் கலந்துபேசி

முடிவு எடுக்கப்படும். இதன்படி நேர்காணல் நடத்துவதற்கான ஒப்புதல் E–migrate வலைதளம் www.emigrate.gov.in வாயிலாக பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்படும். வெளிநாட்டு வேலையளிப்போர் ஆன்லைன் வாயிலாக நேர்காணல் நடத்த விரும்பினால் அதன்படி நடத்தப்படும்.

**ஊ. சான்றிதழ்களின் சான்றொப்பம்**

நேர்காணல் வாயிலாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தங்களின் கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களை மாநில மனிதவளத் துறை மற்றும் இந்தியாவில் உள்ள சம்பந்தப்பட்ட தூதரகங்களில் சான்றொப்பம் பெற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எ. **மருத்துவ தகுதிச் சான்று**

சான்றிதழ்களின் சான்றொப்பம் செயல்முறையை வெற்றிகரமாக முடித்த தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், மருத்துவப் பரிசோதனையை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மையங்களில் மேற்கொண்டு மருத்துவ தகுதிச் சான்று பெற வேண்டும்.

ஏ. **விசா செயல்முறை**

மருத்துவ தகுதிச்சான்று பெற்ற தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கான வேலைவாய்ப்பு விசா வெளிநாட்டு வேலையளிப்போரால் பெறப்பட்டு இந்நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது.

ஐ. **புறப்படுவதற்கு முந்தைய நோக்குநிலை பயிற்சி (Pre–Departure Orientation Training)**

விசாக்களை முத்திரையிட்ட பிறகு, குடிபெயர்வு அனுமதி மற்றும் புறப்படுவதற்கு முந்தைய நோக்குநிலை பயிற்சி (PDOT) ஆகியவை தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு

ஆட்சேர்ப்பு பிரிவால் ஏற்பாடு செய்யப்படும். இந்தப்பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அவரவர் செல்லக்கூடிய நாட்டின் மொழி, கலாச்சாரம் மற்றும் அந்நாட்டின் நடைமுறைகள் ஆகியவற்றை இந்திய அரசின் அங்கீகாரம் பெற்ற PDOT நிறுவனமான மாதிரிதொழில் நெறிவழிகாட்டி மையம் (Model Career Center) மூலம் அளிக்கப்படும்.

ஓ. பயண ஏற்பாடு

வெளிநாட்டு வேலையளிப்போரின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களின் பயணம் தொடர்புடைய ஆவணங்களான விசா மற்றும் விமானப்பயணச்சீட்டு இந்நிறுவனத்தால் ஏற்பாடு செய்து தரப்படும்.

## 11.7 பணியமர்த்தல்

### அ. வெளிநாட்டுப் பணியமர்த்தல்

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978–ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை **10,538** நபர்களை வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் 2021–2022–ஆம் நிதியாண்டில் 253 நபர்களை இங்கிலாந்து, சவுதி அரேபியா, குவைத், ஜக்கிய அரபு அமீரகம், ஓமன் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

இந்நிறுவனம் மூலமாக வெளிநாடுகளில் பணியமர்த்தப்படும் அனைத்து வகையான பணியாளர்களிடமிருந்து வெளிநாட்டு வேலை ஏற்பாடு செய்து அளித்தமைக்காக, இந்திய ஒன்றிய அரசின் வெளியுறவு அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் கட்டணமாக ரூ.35,400/– (18% சேவை வரி உட்பட) பெறப்பட்டு வருகிறது.

**ஆ. உள்நாட்டுப் பணியமர்த்தல்**

வெளிமுகமை (Outsourcing) முறையில் 609 நபர்கள் இந்நிறுவனத்தால் ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு அரசுத்துறைகளில் உள்ள பல்வேறு வேலைகளில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

**11.8 வருவாய்**

2021–2022–ஆம் நிதியாண்டில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் **ரூ.1.53** கோடியாகவும் மற்றும் தணிக்கைக்கு முந்தைய இலாபம் **ரூ.31.57** இலட்சமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

**11.9 புதிய முயற்சிகள்**

i) தமிழ்நாட்டில் உள்ள செவிலியர்களை இங்கிலாந்து நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் பணியமர்த்த தற்சமயம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழகத்திலுள்ள 10 செவிலியர் கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு அக்கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு செவிலியர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் தேர்வு செய்யப்பட்ட OET (Occupational English Test) பயிற்சி நிறுவனங்கள் மூலம் இப்பயிற்சியினை தற்போது புதியதாக தொடங்கியுள்ளது. இந்த பயிற்சிக்காக ரூ.87.50 இலட்சத்தினை தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

ii) இந்நிறுவனம் அயல்நாட்டு வேலை நாடுநர்களுக்கான பதிவினை செய்வதற்கு ஏற்றவாறு கைப்பேசி செயலி (Mobile App) பயன்பாட்டினை விரைவில் உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

iii) மேலும் இந்நிறுவனம் குவைத் நாட்டில் அடிப்படை வீட்டு மேலாண்மை பணிக்காக பெண் பணியாளர்களை (House maid) பணியமர்த்தும் பொருட்டு M/s. Kuwait Gate Foundation, Kuwait என்ற நிறுவனத்துடன் 17.11.2021 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

## 12. முடிவுரை

நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின் கீழ் அயலகத் தமிழர்களின் நலன் காத்தல், இலங்கைத் தமிழர் மற்றும் தாயகம் திரும்பியோர் தொடர்பான நிவாரணப்பணிகளிலும் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை தனது கடமையினை சீரிய முறையில் நிறைவேற்றி வருகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் கௌரவமான, பாதுகாப்பான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் விதமாக

அவர்களுக்குப் போதுமான இருப்பிட வசதி, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடைய கல்வி மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாடு அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் வியாபாரம் காரணமாக அயல்நாடுகளுக்குச் சென்றுள்ள அயலகத் தமிழர்கள் நலன் காத்திடவும், தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் பெருமைகளை நிலைப்படுத்துவதுடன், அடுத்தத் தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணிகளுக்கான முயற்சிகளை தொடங்கியுள்ளதுடன் அதன் இலக்கினை அடையும் பணியினையும் தொடர்ந்து செய்யும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்,**
**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை.**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.